DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| C.C.NO. 33 / 2017 | | Crime No.: | Station : |
|---|---|---|---|
| PW : 4 | L.W. 4 | C.MP. | DVC : |

| Name | மனோகரன் | Caste | |
|---|---|---|---|
| Father's Name | சடையப்பன் | Calling | மருத்துவர்(ஓய்வு) |
| Village | கோவை | Religion | |
| Taluk | | Age | 62 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 22.01.2024 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1. நான் இறுதியாக சென்னை கால்நடைப் பராமரிப்புத் துறையில் கூடுதல் இயக்குநராக பணிபுரிந்து கடந்த 2019-ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 01.11.2013-ம் தேதி வனக் கால்நடை மருத்துவ அலுவலராக கோயில் பணிபுரிந்தபோது வனச்சரகர், சத்தியமங்கலம் அவர்களின் கடித எண்.8/2013, தேதி 01.11.2013 வேண்டுகோள் கடிதத்தின்படி அவர்கள் கைப்பற்றிய சொத்துக்களைப் பரிசோதித்து சான்று வழங்கும்படி வேண்டுகோள் கடிதத்தையும், கைப்பற்றிய பொருட்களான 850 கிராம் எடையுள்ள செதில்கள் என் அலுவலகத்தில் வைத்துக் கொடுக்கப்பட்டது. அந்த செதில்களின் இயற்கை அமைப்பு மற்றும் தன்மை மற்றும் அதன் அளவுகள் ஆகியவற்றை கூர்ந்து ஆய்வு செய்ததில் அந்த செதில்கள் எறும்புத் தின்னியின் செதில்கள்(Indian pangolin) என்று கண்டறியப்பட்டு என்னால் சான்று வழங்கப்பட்டது. **நான் வழங்கிய சான்று அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**மேற்படி சாட்சி விசாரணையானது குற்றச்சாட்டு வனைவதற்கு முன்பாக நடத்தப்பட்ட விசாரணை என்பதால் குறுக்கு விசாரணை செய்யவில்லை என எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர் தெரிவித்தார்.**